2020

2020

No. of Printed Pages : 4

21300

**4577**

*Register Number* | | | | | | | |

**Second Year**

# சமூக அறிவியல் கற்பித்தல்

# TEACHING OF SOCIAL SCIENCE

(Tamil Version)

கால அளவு : 3 மணி நேரம் — மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள்** : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

## பிரிவு - அ

## (பாடப்பொருள்)

**அனைத்து** வினாக்களுக்கும் 100 வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

**10x2=20**

1. இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு எது ? ஏன் அவ்வாறு அழைக்கப் படுகிறது ?

2. தகவல் தொடர்பின் வகைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

3. சமயச்சார்பின்மை குறித்து உமது கருத்து யாது ?

4. பெண்கள் அதிகாரம்பெற எளிதாக்கும் காரணிகளை குறிப்பிடுக.

5. வானிலை – காலநிலைக்கும் உள்ள வேறுபாட்டினைக் கூறுக.

6. பருவக்காற்றுகள் – குறிப்பு வரைக.

[ Turn over

7. சுனாமி ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை ?

8. பேனத் தகுந்த முன்னேற்றம் என்றால் என்ன ?

9. காடுகள் அழிவதற்கான முக்கிய காரணங்களை எழுதுக.

10. பேரிடர் மேலாண்மையில் மாநில அரசு அமைப்பின் பணிகள் யாவை ?

## பிரிவு - ஆ
## (கற்பிக்கும் முறை)

**அனைத்து** வினாக்களுக்கும் **100** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

**10x2=20**

11. இணைய மூலம் பெறப்படும் தகவல்கள் யாவை ?

12. சமூக அறிவியல் கற்பித்தலில் இணையவழி அணுகுமுறைப்பற்றி கூறுக.

13. உண்மைக் கதைகள் மூலம் எத்தகைய கருத்துக்களை மாணவர்களுக்கு கற்பிக்கலாம் ?

14. கதை கூறும்போது ஆசிரியர் வினாக் கேட்பதின் அவசியம் யாது ?

15. பணிமனையின் மையக்கருத்து எவ்வாறு அமைந்திருக்கவேண்டும் ?

16. அறிவியல் சிந்தனை தூண்டல்முறையினை வரையறுக்கவும்.

17. அறிவியல் சிந்தனை தூண்டல் முறையில் எவ்வாறு தீர்வை பகிர்வாய் ?

18. சமூக அறிவியல் பாடங்களை நடத்துவதில் நாடகங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

19. கல்வி மதிப்பீட்டில் காணப்படும் நான்கு நிலைகளைக் கூறுக.

20. வாய்மொழித் தேர்வின் பயன்பாடு யாது ?

## பகுதி - II
## பிரிவு - அ
## (பாடப்பொருள்)

**ஏதேனும் ஐந்து** வினாக்களுக்கு **ஒவ்வொரு** வினாவிற்கும் **200** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

**21.** இந்திய வேளாண்மை துறையின் வளர்ச்சி பற்றி எழுதுக.

**22.** நீர்பாசனம் ஏன் அவசியமாகிறது ? இந்திய நீர்பாசன முறைகளை சுருக்கி வரைக.

**23.** ஓர் ஆசிரியராக தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வழிவகையை கூறுக.

**24.** குழந்தைத் தொழில்கள் தொடர்பான சட்டங்கள் எவையேனும் எட்டினை(8) எழுதுக.

**25.** எழுத்தறிவின்மையை போக்கும் வழிகள் யாவை ?

**26.** ஏரிகளின் வகைகளை விளக்குக.

**27.** கடல் நீரோட்டங்கள் எத்தனை வகைப்படும், அவை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன ?

**28.** புவியின் வெப்ப அதிகரிப்பால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

## பிரிவு - ஆ
## (கற்பிக்கும் முறை)

**ஏதேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளி. **ஒவ்வொரு** வினாவிற்கும் **200** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளி. **5x4=20**

**29.** இணைய தகவல் ஆதாரங்களை தேடும் முறைப்பற்றி எழுதுக.

**30.** இணையவழி கற்பித்தலின் படிநிலைகள் யாவை ?

**31.** சமூக அறிவியல் பாடம் கற்பித்தலில் படங்களை பயன்படுத்தும் முறைகள் யாவை ?

**32.** கதைகளைத் தயாரிக்கும் போது ஆசிரியர்கள் கடைபிடிக்க வேண்டியவை யாவை ?

33. சமூக அறிவியல் கற்றலில் உருமாதிரிகளின் பயன்பாட்டினை விவரிக்கவும்.

34. அறிவியல் சிந்தனை தூண்டல் முறையின் சிறப்பம்சங்கள் ஏதேனும் எட்டினை எழுதுக.

35. ஓர் ஆசிரியரின் பார்வையில் நாடக முறையில் கவனிக்க வேண்டிய அம்சங்கள் யாவை ?

36. திறன் அடிப்படையிலான முழுமையான தொடர் மதிப்பீட்டின் நோக்கங்களை கூறுக.

## பகுதி - III

**இரண்டு** வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **500** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளி. **2x10=20**

37. (அ) "உலக வெப்பமயமாதல்" என்ற கருத்தினை கதை சொல்லும் முறையில் எவ்விதம் கற்பிப்பாய் என்பதை விவரி.

**அல்லது**

(ஆ) அறிவியல் சிந்தனை தூண்டல் முறையின் படிநிலைகளைப் பயன்படுத்தி ஆறாம் வகுப்பு புவியியல் பாடத்தில் ஏதேனும் ஒரு தலைப்பினைத் தெரிவு செய்து எவ்வாறு கற்பிப்பாய் ?

38. (அ) கற்றல் கற்பித்தலில் பணிமனையை எந்தெந்த காரணங்களுக்காக செயல்படுத்தலாம் ?

**அல்லது**

(ஆ) மதிப்பீட்டின் வகைகளை விளக்கி எழுதுக.

-oOo-